Q.C - 040

# DEPARTMENTAL EXAMINATIONS (COMPUTER BASED TEST)

**Name of the Test:**

| | |
|---|---|
| Departmental Test for Officers of the Cooperative Department - Book - Keeping (Without Books) | 057 |

Maximum Time: One Hour　　　　　　Maximum Marks: 40

## ***IMPORTANT INSTRUCTIONS***

## OBJECTIVE TYPE

கொள்குறி வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**
வினாக்களுக்கு விடையளிக்கத் தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளைக் கவனமாகப் படிக்கவும்.

1. This computer based Test contains 40 number of questions in objective Type.
   இந்தக் கணினி வழித் தேர்வானது, 40 கொள்குறி வகையிலான வினாக்களைக் கொண்டது.

2. Answer all questions. Each question carries one mark
   அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் ஒவ்வொரு வினாவும் ஒரு மதிப்பெண் உடையது.

3 In case of doubt, English version is the Final.
   வினாக்களில் சந்தேகம் இருப்பின் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

4. Words of masculine gender in these questions shall, where the context so require, be taken to include feminine gender.
   இந்த வினாக்களில் இடம் பெற்றுள்ள ஆண் பாலினத்தவரின் வார்த்தைகளில் தேவைப்படின், சூழலுக்கேற்ப பெண் பாலினத்தவரின் வார்த்தைகளும் அடங்கும்.

5. Before answering the questions in CBT, candidates should read the following instructions displayed in the monitor:
   விண்ணப்பதாரர்கள் கணினி வழித் தேர்விற்கு விடையளிக்கத் தொடங்கும் முன் கணினியின் திரையில் தோன்றும் அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்.

**a)** One question will be displayed on the screen at a time.
ஒரே நேரத்தில் ஒரு வினா மட்டுமே கணினித் திரையில் தோன்றும்.

**b)** Time available for you to complete the examination will be displayed through a countdown timer in the top right-hand corner of the screen. It will display

1. The root of financial accounting is
நிதிநிலைக் கணக்கின் அடிப்படையாக விளங்குவது

(A) Social accounting
சமூகக் கணக்கியல்

(B) Stewardship accounting
காரியதரிசிகளின் கணக்கியல்

(C) Management accounting
மேலாண்மை கணக்கியல்

(D) Responsibility accounting
பொறுப்பு கணக்கியல்

2. Balance as per bank statement is Rs. 1,000 Cheque deposited, but not yet credited by the bank is Rs. 2,000. What is the balance as per bank column of the cash book?
வங்கி அறிக்கையின்படி இருப்பு ரூ. 1,000. செலுத்தியது காசோலை இன்னும் வங்கியால் வரவு வைக்கப்படாதது ரூ.2,000. ரொக்க ஏட்டில் வங்கிப் பத்தியின் இருப்பு எவ்வளவு?

(A) Rs. 3,000 overdraft
ரூ. 3,000 மேல் வரைப்பற்று

(B) Rs. 3,000 favourable
ரூ. 3,000 சாதகமான இருப்பு

(C) Rs. 1,000 overdraft
ரூ. 1,000 மேல் வரைப்பற்று

(D) Rs. 1,000 favourable
ரூ. 1,000 சாதகமான இருப்பு

3. Accounting equation signifies
கணக்கியல் சமன்பாடு குறிப்பது

(A) Capital of a business is equal to assets
வியாபாரத்தின் முதல், சொத்திற்கு சமமானது

(B) Liabilities of a business is equal to assets
வியாபாரத்தின் பொறுப்புகள், சொத்திற்கு சமமானது

(C) Capital of a business is equal to liabilities
வியாபாரத்தின் முதல், பொறுப்புகளுக்கு சமமானது

(D) Assets of a business are equal to the total of capital and liabilities
வியாபாரத்தின் சொத்துக்கள், முதல் மற்றும் பொறுப்புகளுக்கு சமமானது

4. If the total of the debit side of an account exceeds the total of its credit side, it means
ஒரு கணக்கின் வரவு மொத்தத்தை விட பற்று மொத்தம் அதிகமாக இருப்பின் அதன் பொருள்

(A) Debit balance
பற்று இருப்பு

(B) Credit balance
வரவு இருப்பு

(C) Nil balance
இருப்பின் தன்மை

(D) Debit and credit balance
பற்று மற்றும் வரவு இருப்பு

5. TALLY is an example of
TALLY என்பது இதற்கு உதாரணமாக இருக்கிறது

(A) Tailor-made accounting software
உருவாக்கப்பட்ட கணக்கியல் மென்பொருள்

(B) Ready-made accounting software
ஆயத்த கணக்கியல் மென்பொருள்

(C) In-built accounting software
உள்கட்டமைக்கப்பட்ட கணக்கியல் மென்பொருள்

(D) Customised accounting software
திருத்தியமைக்கப்பட்ட கணக்கியல் மென்பொருள்

6. Under the written down value method of depreciation, the amount of depreciation is
குறைந்து செல் மதிப்பு முறையில் தேய்மானத் தொகையானது

(A) Uniform in all the years
அனைத்து ஆண்டுகளிலும் ஒரே மாதிரியாக இருக்கும்

(B) Decreasing every year
ஆண்டுதோறும் குறையும்

(C) Increasing every year
ஆண்டுதோறும் அதிகரிக்கும்

(D) None of the above
மேற்கூறியவற்றில் எதுவுமில்லை

7. The business is liable to the proprietor of the business in respect of capital introduced by the person according to
வணிகத்தின் உரிமையாளர் இட்ட முதலிற்கு, வணிக நிறுவனம் கடன்பட்டிருக்கிறது என்பதைக் கூறும் கருத்து

(A) Money measurement concept
பண மதிப்பீட்டுக் கருத்து

(B) Cost concept
அடக்கவிலை கருத்து

(C) Business entity concept
வணிகத்தனித்தன்மை கருத்து

(D) Dual aspect concept
இரட்டைத்தன்மை கருத்து

8. JF means
கு.ப.எ. என்பது

(A) Ledger page number
பேரேட்டுப் பக்க எண்

(B) Journal page number
குறிப்பேட்டுப் பக்க எண்

(C) Voucher number
சான்று சீட்டு எண்

(D) Order number
ஆணை எண்

9. Sales book is used to record
விற்பனை ஏடு எதைப் பதிவு செய்ய உதவுகிறது

(A) All sales of goods
அனைத்து சரக்குகளின் விற்பனை

(B) All credit sales of assets
அனைத்து சொத்துக்களின் கடன் விற்பனை

(C) All credit sales of goods
அனைத்து சரக்குகளின் கடன் விற்பனை

(D) All sale of assets and goods
அனைத்து சொத்துக்கள் மற்றும் சரக்குகள் விற்பனை

10. Expense on advertisement will be classified under
விளம்பரத்திற்காக செய்யப்படும் தொகை இவ்வாறு வகைப்படுத்தப்படுகிறது.

(A) Capital expenditure
முதலினச் செலவு

(B) Revenue expenditure
வருவாயினச் செலவு

(C) Deferred revenue expenditure
நீள்பயன் வருவாயினச் செலவு

(D) Capital receipt
வருவாயின வரவு

11. On 12th July 2018, Ram draws a bill on Suresh for 1 month, its due date is
ஜூலை 12, 2018 அன்று, ராம் சுரேஷிடம் 1 மாதத்திற்கு வழங்கிய மாற்றுச் சீட்டின் காலக்கெடு தேதி

(A) 14th August 2018
14th ஆகஸ்ட் 2018

(B) 15th August 2018
15th ஆகஸ்ட் 2018

(C) 12th August 2018
12th ஆகஸ்ட் 2018

(D) 11th August 2018
11th ஆகஸ்ட் 2018

12. Patent is a
காப்புரிமை என்பது

(A) Tangible real A/c
புலனாகும் சொத்துக் கணக்கு

(B) Intangible Real A/c
புலனாகாச் சொத்துக் கணக்கு

(C) Personal A/c
ஆள்சார் கணக்கு

(D) Nominal A/c
பெயரளவுக் கணக்கு

13. A Bank statement is a copy of
வங்கி அறிக்கை என்பது

(A) Cash column of the cash book
ரொக்க ஏட்டின் ரொக்கப் பத்தியின் நகல்

(B) Bank column of the cash book
ரொக்க ஏட்டின் வங்கிப் பத்தியின் நகல்

(C) A customer's account in the bank's book
வங்கி புத்தகத்தில் வாடிக்கையாளர் கணக்கின் நகல்

(D) Cheques issued by the business
வணிகத்தால் விடுக்கப்பட்ட காசோலையின் நகல்

14. Proceeds from issue of shares and debentures is an example for
பங்குகள் மற்றும் கடனீட்டு பத்திரங்கள் வெளியிடுவதன் மூலம் கிடைக்கும் தொகை ஒரு

(A) Capital receipt
முதலின வரவு

(B) Revenue receipt
வருவாயின வரவு

(C) Capital expenditure
முதலினச் செலவு

(D) Revenue expenditure
வருவாயினச் செலவு

15. A credit purchase of furniture from Athiyaman was debited to purchases account. Which of the following accounts should be debited while rectifying this error?
அதியமானிடமிருந்து கடனுக்கு அறைகலன் வாங்கியது கொள்முதல் கணக்கில் பற்று வைக்கப்பட்டுள்ளது. இப்பிழையைத் திருத்தம் செய்யும் போது, கீழ்க்கண்டவற்றில் எந்தக் கணக்கைப் பற்று வைக்க வேண்டும்.

(A) Purchases account
கொள்முதல் கணக்கு

(B) Athiyaman account
அதியமான் கணக்கு

(C) Furniture account
அறைகலன் கணக்கு

(D) Sales account
விற்பனை கணக்கு

16. Depreciation is the process of
தேய்மான வழிமுறை என்பது

(A) Allocation of cost of the asset to the period of its useful life
சொத்தின் அடக்க விலையை, சொத்தின் பயனளிப்புக் காலம் முழுக்க நீக்குதல்

(B) Valuation of assets
சொத்துக்களை மதிப்பீடு செய்தல்

(C) Maintenance of an asset in a state of efficiency
நல்ல நிலையில் சொத்தினைப் பராமரித்தல்

(D) Adding value to the asset
சொத்தின் மதிப்பினை அதிகரித்தல்

17. The total of the sales book is posted periodically to the credit of
விற்பனை ஏட்டின் மொத்தம் ஒரு குறிப்பிட்ட கால அளவில் வரவு வைக்கப்படுவது

(A) Sales account
விற்பனை கணக்கு

(B) Cash account
ரொக்க கணக்கு

(C) Purchases account
கொள்முதல் கணக்கு

(D) Journal proper
உரிய குறிப்பேடு

18. Life membership fees is an example of
ஆயுள் சந்தா பெற்றது ஒரு

(A) Revenue receipt
வருவாயின வரவு

(B) Capital receipt
முதலின வரவு

(C) Capital expenditure
வருவாயினச் செலவு

(D) Revenue expenditure
முதலினச் செலவு

19. Which of the following is the first step in the accounting process?
கீழ்கண்டவற்றுள் கணக்கியலின் முதல்படி எது?

(A) Identifying the financial transactions
நிதியியல் தகவல்களை இனம் காணுதல்

(B) Transferring the entries from journal to ledger
எடுத்தெழுதல் மற்றும் இருப்புக் கட்டுதல்

(C) Preparation of trial balance
இருப்பாய்வு தயார் செய்தல்

(D) Preparation of balance sheet
இருப்புநிலைக் குறிப்பு தயாரித்தல்

20. One of the limitations of computerized accounting system is
கணினிமயக் கணக்கியல் முறையின் குறைபாடுகளில் ஒன்றானது

(A) System failure
கணினி அமைப்பு செயலிழத்தல்

(B) Accuracy
துல்லியத்தன்மை

(C) Versatility
பலதுறைப் புலமை

(D) Storage
தேக்கம்

21. Petty cash may be used to pay
எந்த செலவிற்காக சில்லறை ரொக்கத்திலிருந்து கொடுக்கலாம்?

(A) The expenses relating to postage and conveyance
தபால் செலவு மற்றும் பயணச் செலவு

(B) Salary to the manager
மேலாளரின் ஊதியம்

(C) Purchase of furniture and fixtures
அறைகலன் மற்றும் பொருத்துகைகள் வாங்க

(D) Purchase of raw materials
மூலப்பொருள்கள் வாங்க

22. When goods are purchased for cash, the entry will be recorded in the
ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியதை எந்தப் பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டும்.

(A) Cash book
ரொக்க ஏடு

(B) Purchase book
கொள்முதல் ஏடு

(C) Journal
உரிய குறிப்பேடு

(D) Ledger
பேரேடு

23. Wages paid to worker for the installation of a new Machinery should be debited to
இயந்திரத்தை நிறுவுவதற்காக வழங்கிய கூலி, பற்று வைக்கப்பட வேண்டிய கணக்கு

(A) Wages account
கூலி கணக்கு

(B) Machinery account
இயந்திர கணக்கு

(C) Factory expenses account
அலுவலகச் செலவு கணக்கு

(D) Worker's account
வேலையாட்கள் கணக்கு

24. When a firm maintains a simple cash book, it need not maintain
சாதாரண ரொக்க ஏட்டை வைத்திருக்கும் ஒரு நிறுவனம், எந்த கணக்கை தயாரிக்க தேவை இல்லை?

(A) Sales account in the ledger
பேரேட்டில் விற்பனைக் கணக்கு

(B) Purchases account in the ledger
பேரேட்டில் கொள்முதல் கணக்கு

(C) Capital account in the ledger
பேரேட்டில் முதல் கணக்கு

(D) Cash account in the ledger
பேரேட்டில் ரொக்க கணக்கு

25. Pre-operative expenses are
வணிகச் செயல்பாட்டிற்கு முந்தைய செலவுகள்

(A) Revenue expenditure
வருவாயினச் செலவுகள்

(B) Prepaid revenue expenditure
முன்கூட்டி செலுத்திய வருவாயினச் செலவுகள்

(C) Deferred revenue expenditure
நீள்பயன் வருவாயினச் செலவுகள்

(D) Capital expenditure
முதலினச் செலவுகள்

26. The financial statements should disclose all material items is based on
நிதி அறிக்கையின் வெளிப்பாடு முழுமையானதாக இருக்க வேண்டும் என்பது எந்த அடிப்படையில் அமைந்தது.

(A) Convention of materiality
முக்கியத்தன்மை மரபு

(B) Convention of prudence
முன்னெச்சரிக்கை மரபு

(C) Convention of disclosure
முழு வெளிப்படுத்துதல் மரபு

(D) Convention of consistency
நிலைத்தன்மை மரபு

27. Rent received is an example of
வாடகை பெற்றது ____________ ஒரு உதாரணத்துடன்

(A) Capital receipt
முதலின வரவு

(B) Capital expenditure
முதலின செலவு

(C) Revenue receipt
வருவாயின வரவு

(D) Revenue expenditure
வருவாயின செலவு

28. Which one of the following is a not timing difference?
பின்வருவனவற்றில் எது காலத்தினால் ஏற்படும் வேறுபாடு அல்ல?

(A) Cheque deposited but not credited
செலுத்திய காசோலை இன்னும் வரவு வைக்கப்படாதது

(B) Cheque issued but not yet presented for payment
விடுத்த காசோலை இன்னும் செலுத்துகைக்கு முன்னிலைப்படுத்தப்படாதது

(C) Amount directly paid into the bank
வங்கியில் நேரடியாக செலுத்திய தொகை

(D) Wrong debit in the cash book
ரொக்க ஏட்டில் தவறுதலாக பற்று வைத்தது

29. Amount spent on increasing the seating capacity in a cinema hall is
திரையரங்கின் இருக்கை வசதிகளை அதிகரிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள்

(A) Capital expenditure
முதலினச் செலவு

(B) Revenue expenditure
வருவாயினச் செலவு

(C) Deferred revenue expenditure
நீள்பயன் வருவாயினச் செலவு

(D) Revenue receipt
வருவாயின வரவு

30. When settlement is not made by cash or through bank immediately in a transaction, it is called
ஒரு வணிக நடவடிக்கையில் உடனடியாக பணப் பரிமாற்றம் நடைபெறவில்லையெனில் அது ———— என்கிறோம்.

(A) Credit transaction
கடன் நடவடிக்கை

(B) Cash transaction
ரொக்க நடவடிக்கை

(C) Bank transaction
வங்கி நடவடிக்கை

(D) None of the above
மேற்கண்ட எதுவுமில்லை

31. Kannan purchases goods worth Rs. 1,00,000 for the purpose of selling. This amount will be treated as
விற்பனை செய்வதற்காக கண்ணன் ரூ. 1,00,000 மதிப்புள்ள பொருட்களை கொள்முதல் செய்கிறார். இத்தொகை எவ்விதம் பதிவு செய்யப்படும்.

(A) Capital expenditure
முதலின செலவு

(B) Revenue expenditure
வருவாயின செலவு

(C) Deferred Revenue expenditure
நீள்பயன் வருவாயின செலவு

(D) Revenue receipt
வருவாயின செலவு

32. Sale of goods to Mr. Arun on credit not recorded in the sales book is an
அருணுக்கு கடனுக்கு விற்ற சரக்கு விற்பனை ஏட்டில் பதிவு செய்யப்படாதது ஒரு

(A) Error of complete omission
முழு விடு பிழை

(B) Error of partial omission
பகுதி விடு பிழை

(C) Error of principle
செய் பிழை

(D) None of the above
இவை எதுவுமில்லை

33. The liabilities of a business are Rs, 30,000, the capital of the proprietor is Rs. 70,000. The total assets are
ஒரு வணிகத்தின் பொறுப்புகள் ரூ. 30,000 உரிமையாளரின் மூலதனம் ரூ. 70,000 எனில் மொத்த சொத்துக்களின் மதிப்பு

(A) Rs. 70,000
ரூ. 70,000

(B) Rs. 1,00,000
ரூ. 1,00,000

(C) Rs. 30,000
ரூ. 30,000

(D) Rs. 40,000
ரூ. 40,000

34. The total purchases book was overcast. Which of the following accounts should be debited in the rectifying journal entry?
கொள்முதல் ஏட்டின் மொத்தத் தொகை அதிகமாகக் கூட்டப்பட்டுள்ளது. இப்பிழையைத் திருத்தம் செய்யும் போது, கீழ்க்கண்டவற்றில் எந்தக் கணக்கைப் பற்று வைக்க வேண்டும்?

(A) Purchases account
கொள்முதல் கணக்கு

(B) Suspense account
அனாமத்துக் கணக்கு

(C) Creditor account
கடனீந்தோர் கணக்கு

(D) Debtor account
பற்றுக் கணக்கு

35. Expenditure incurred Rs. 50,000 for trial run of a newly installed machinery will be
புதிதாக நிறுவப்பட்ட இயந்திரத்தினைச் சோதனை ஓட்டம் மேற்கொள்வதற்காக செய்த செலவு ரூ. 50,000

(A) Preliminary expense
தொடக்கச் செலவு

(B) Revenue expenditure
வருவாயினச் செலவு

(C) Capital expenditure
முதலினச் செலவு

(D) Deferred revenue expenditure
நீள்பயன் வருவாயினச் செலவு

36. Cash book is a
ரொக்க ஏடு ஒரு

(A) Subsidiary book
துணை ஏடு

(B) Principal book
முதன்மை ஏடு

(C) Journal proper
உரிய குறிப்பேடு

(D) Both Subsidiary book and Principal book
துணை ஏடு மற்றும் முதன்மை ஏடு இரண்டும்

37. Cash received from sale of fixed asset is credited to
நிலைச் சொத்து விற்பனை மூலம் பெறப்படும் தொகை எந்த கணக்கில் வரவு வைக்கப்படுகிறது.

(A) Profit and loss account
இலாப நட்டக் கணக்கு

(B) Fixed asset account
நிலைச் சொத்துக் கணக்கு

(C) Depreciation account
தேய்மானக் கணக்கு

(D) Bank account
வங்கி கணக்கு

38. Revenue expenditure is intended to benefit
வருவாயினச் செலவின் பலன் கிடைப்பது

(A) Past period
கடந்த காலத்திற்கு

(B) Future period
எதிர் காலத்திற்கு

(C) Current period
நடப்பு காலத்திற்கு

(D) Any period
எந்தக் காலத்திற்கும்

39. The difference of totals of both debit and credit side of trial balance is transferred to
இருப்பாய்வில் பற்றுப்பத்தியின் மொத்தமும் வரவு பத்தியின் மொத்தமும் வேறுபட்டால் அதை எடுத்து எழுத வேண்டிய கணக்கு

(A) Trading account
வியாபாரக் கணக்கு

(B) Difference account
வேறுபாட்டு கணக்கு

(C) Suspense account
அனாமத்து கணக்கு

(D) Miscellaneous account
இதர கணக்கு

40. When money is withdrawn from bank, the bank
வங்கியிலிருந்து பணம் எடுக்கும் போது வங்கியானது

(A) Credits a customer account
வாடிக்கையாளர் கணக்கில் வரவு செய்யும்

(B) Debits a customer account
வாடிக்கையாளர் கணக்கில் பற்று செய்யும்

(C) Debits and credits a customer account
வாடிக்கையாளர் கணக்கில் பற்று மற்றும் வரவு செய்யும்

(D) None of these
மேற்கண்ட ஏதுமில்லை

# 040/DM/24

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

## DEPARTMENTAL EXAMINATIONS
## DEPARTMENTAL TEST FOR OFFICERS OF THE CO-OPERATIVE DEPARTMENT – BOOK KEEPING

(Without Books)

Maximum Time : 1:30 hours Maximum Marks : 60

***IMPORTANT INSTRUCTIONS***

### DESCRIPTIVE TYPE
**விரிவான விடையளிக்கும் வகை வினாத்தாள்**

**Read the following instructions carefully before beginning to answer the questions.**
வினாக்களுக்கு விடையளிக்க தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாக படிக்கவும்.

1. Answers in excess of the prescribed number of questions appearing at the end of the answer book will not be valued.

   விடைகளை குறிப்பிட்டுள்ள எண்ணிக்கைக்கு அதிகமாக எழுதியிருப்பின், விடைத்தாளின் இறுதியில் உள்ள அதிக எண்ணிக்கையிலான விடைகள் மதிப்பீடு செய்யப்படாது.

2. In case of doubt, English version is the final.

   வினாக்களில் சந்தேகமிருப்பின் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

I. **Answer any EIGHT questions only.** **(8 × 3 = 24)**
**எவையேனும் எட்டு கேள்விகளுக்கு மட்டும் விடையளிக்கவும்.**

1. What is Cost accounting?

   அடக்கவிலை கணக்கியலின் பொருளை விளக்குக.

2. What is Bank Reconciliation Statement?

   வங்கி சரிக்கட்டும் பட்டியல் என்றால் என்ன?

3. Write a note on Suspense account.

   அனாமத்துக் கணக்கு பற்றி குறிப்பு எழுதவும்.

4. What are mnemonic codes?

   மதியோட்டுக் குறிமுறை என்றால் என்ன?

**[Turn over**

5. Mention any three limitations of computerized accounting system.

கணினிமயக் கணக்கியல் முறையின் குறைபாடுகள் ஏதேனும் மூன்றினைத் தருக.

6. Distinguish between Capital receipt and Revenue receipt.

முதலின வரவு மற்றும் வருவாயின வரவு – வேறுபடுத்துக.

7. Classify the following items into capital and revenue :
(a) Registration expenses incurred for the purchase of land
(b) Carriage paid on goods sold
(c) Legal expenses paid for raising of loans.

பின்வரும் செலவினங்களை முதலின, வருவாயினச் செலவினங்களாக வகைப்படுத்தவும் :
(அ) நிலம் வாங்குவதற்கு செய்யப்பட்ட பத்திரப்பதிவு கட்டணம்
(ஆ) சரக்கு கொள்முதலின் போது செலுத்திய ஏற்றிச்செல் கட்டணம்
(இ) கடன் பெறுவதற்காக செய்யப்பட்ட சட்டச் செலவுகள்.

8. Give any three expenses which may be paid by the banker as per the standing instruction.

நிலை அறிவுறுத்தலின்படி வங்கியால் செலுத்தப்பெறும் மூன்று செலவுகளைத் தருக.

9. What is Petty cash book?

சில்லறை ரொக்க ஏடு என்றால் என்ன?

10. What is Trial balance?
இருப்பாய்வு என்றால் என்ன?

**II. Answer any THREE questions only. (3 × 5 = 15)**

**எவையேனும் மூன்று கேள்விகளுக்கு மட்டும் விடையளிக்கவும்.**

1. Discuss briefly the branches of Accounting.

கணக்கியலின் பிரிவுகளை சுருக்கமாகக் கூறுக.

2. From the following information, calculate the amount of depreciation and rate of depreciation under Straight Line Method

| | |
|---|---|
| Purchase price of Machine | Rs.2,00,000 |
| Expenses to be capitalized | Rs.50,000 |
| Estimated residual value | Rs.15,000 |
| Expected useful life | 5 years |

கீழ்கண்ட தகவல்களைக் கொண்டு, நேர்கோட்டு முறையில் தேய்மானத் தொகை மற்றும் தேய்மான விகிதம் காண்க.

| | |
|---|---|
| இயந்திரம் வாங்கிய விலை | ரூ.2,00,000 |
| மூலதனமாக்கப்பட வேண்டிய செலவுகள் | ரூ.50,000 |
| எதிர் நோக்கும் இறுதி மதிப்பு | ரூ.15,000 |
| எதிர் நோக்கும் பயனளிப்புக் காலம் | 5 வருடங்கள் |

3. What are the differences between book keeping and accounting?

கணக்கேடுகள் பராமரிப்பிற்கும் கணக்கியலுக்கும் இடையிலான வேறுபாடுகள் யாவை?

4. Prepare Furniture account from the following transactions 2015.

| | | |
|---|---|---|
| Jan 1 | Furniture in hand | Rs.2,000 |
| 1 | Purchased furniture for cash | Rs.4,000 |
| 30 | Sold furniture | Rs.400 |

பின்வரும் நடவடிக்கைகளிலிருந்து 2015ன் அறைகலன் கணக்கைத் தயாரிக்கவும்

| | | |
|---|---|---|
| ஜனவரி 1 | கையில் உள்ள அறைகலன் | ரூ.2,000 |
| 1 | அறைகலன் ரொக்கத்திற்கு வாங்கியது | ரூ.4,000 |
| 30 | அறைகலன் விற்றது | ரூ.400 |

5. What is deferred revenue expenditure? Explain its features. Give two examples.

நீள்பயன் வருவாயினச் செலவு என்றால் என்ன? அதன் இயல்புகளை விளக்குக. இரண்டு உதாரணங்கள் தருக.

**III. Answer any THREE questions only.** **(3 × 7 = 21)**

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.**

1. State the nature of account and show which account will be credited.

(a) Rent received

(b) Building purchased

(c) Machinery sold

(d) Discount allowed

(e) Discount received

கீழ்கண்ட விபரங்களின் கணக்கியல் தன்மையினை வகைப்படுத்துக. அதனை எந்தக் கணக்கில் பற்று வரவு செய்ய வேண்டுமென்பதையும் எழுதுக.

(அ) வாடகை பெற்றது

(ஆ) கட்டிடம் வாங்கியது

(இ) இயந்திரம் விற்றது

(ஈ) தள்ளுபடி அனுமதித்தது

(உ) தள்ளுபடி பெற்றது.

2. Prepare Bank Reconciliation Statement from the following data and find out the balance as per cash book as on 31st March 2018.

| | Particulars | Rs. |
|---|---|---|
| 1. | Balance as per cash book | 15,000 |
| 2. | Cheques deposited but not yet credited | 1,000 |
| 3. | Cheques issued and entered in the cash book before 31st December 2018 but not presented for payment until that date | 1,500 |
| 4. | Dividend directly received by bank | 200 |
| 5. | Direct payment made by bank for rent | 1,000 |
| 6. | Locker rent charged by the bank not recorded in cash book | 1,200 |
| 7. | Wrong debit given by the bank on 30th December 2018 | 500 |
| 8. | A payment made through net banking has been entered twice in the cash book | 300 |

பின்வரும் தகவல்களின்படி மார்ச் 31, 2018 ஆம் நாளுக்குரிய வங்கிச் சரிக்கட்டும் பட்டியலைத் தயார் செய்து வங்கி அறிக்கையின்படியான இருப்பினைக் கண்டறிக.

| | விவரங்கள் | ரூபாய் |
|---|---|---|
| 1. | வங்கி அறிக்கையின் படியான வங்கி இருப்பு | 15,000 |
| 2. | செலுத்திய காசோலை இன்னும் வரவு வைக்கப்படாதது | 1,000 |
| 3. | டிசம்பர் 31, 2018 க்கு முன்னர் விடுத்த காசோலை ரொக்க ஏட்டில் பதியப்பெற்று அந்நாள் வரை செலுத்துகைக்கு முன்னிலைப்படுத்தப்படவில்லை | 1,500 |
| 4. | வங்கியால் நேரடியாகப் பெற்ற பங்காதாயம் | 200 |
| 5. | வங்கியால் நேரடியாகச் செலுத்தப்பெற்ற வாடகை | 1,000 |
| 6. | வங்கி வசூலித்த பாதுகாப்பு பெட்டக வாடகை ரொக்க ஏட்டில் பதியப்படவில்லை | 1,200 |
| 7. | 2018 டிசம்பர் 30 அன்று வங்கியால் செய்யப்பட்ட தவறுதலான பற்று | 500 |
| 8. | இணைய வங்கி வாயிலாக செலுத்தியது ரொக்க ஏட்டில் இருமுறை பதிவு செய்யப்பட்டது | 300 |

3. State the advantages and limitations of Written down value method of depreciation.

குறைந்து செல் மதிப்பு முறையில் தேய்மானம் கணக்கிடுதலின் நன்மைகள் மற்றும் குறைபாடுகள் யாவை?

4. Bring out the differences between cash discount and trade discount.

ரொக்கத் தள்ளுபடிக்கும், வியாபாரத் தள்ளுபடிக்கும் உள்ள வேறுபாடுகளை எழுதுக.

5. Distinguish between Journal and Ledger

குறிப்பேட்டினை பேரேட்டுடன் வேறுபடுத்துக.

---